## 2

## *திறவுகோல் வசனம்: லூக்கா 22:14-20*

# கர்த்தருடைய இராப்போஜனத்தின் அர்த்தம் (2)

இயேசு, ஒரு மனிதப் பிறவியாக இந்த உலகத்தில் பிரவேசித்து, மாம்சமும் இரத்தமும் உடையவராகி, 3½ ஆண்டுகள் காலம் தமது சொந்த ஊழியத்தைக் கொண்டிருந்தார். அவர் பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டதால் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் சரீரத்துடன் உயிர்த்தெழுந்தார். பின்பு அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்று, இப்போது அங்கிருந்தபடியே வானத்தையும் பூமியையும் ஆளுகை செய்கிறார் (மத்தேயு 28:18; எபேசியர் 1:20-23; 1 பேதுரு 3:22). காலத்தின் முடிவில் அவரது இரண்டாம் வருகை என்பது அடுத்த மாபெரும் நிகழ்வாக இருக்கும் (யோவான் 14:3; 1 கொரிந்தியர் 15:22-27). இயேசுவைப் பற்றிய இந்த மாபெரும் உண்மைகள் கர்த்தரின் இராப்போஜனத்தின் மூலமாக கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டப்படுவதோடு, அவர் திரும்பவும் வரும்வரையில் அது (கர்த்தரின் இராப்போஜனம்) அவரது மரணத்தை அறிவிக்கிறது.

கிறிஸ்தவர்களுக்குக் கர்த்தரின் இராப்போஜனத்தினுடைய அர்த்தம் பின்வரும் திறவுகோல் சிந்தனைகளை உள்ளடக்குகிறது:

- இயேசுவையும் அவரது மரணத்தையும் நினைவுகூருதல்.
- இயேசு நமக்கு எவ்வகையில் கருத்தாகிறார் என்பதைத் தியானித்தல்.
- அவருடன் ஆவிக்குரிய வகையில் ஐக்கியம் கொண்டிருத்தல்.
- அவருக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துதல்.
- அவரை தேவனுடைய குமாரன், மேசியா என்ற வகையில் கனப்படுத்துதல்.
- கர்த்தர் மற்றும் கிறிஸ்து என்ற வகையில் அவருக்கு மதிப்புக் காண்பித்தல்.
- மாபெரும் ஒப்புவித்தலுக்கு ஊக்குவிக்கப்படுதல்.
- ஒருமைப்பட்ட சரீரம் என்ற வகையில் கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் கொள்ளுதல்.
- அவரது சரீரம் மற்றும் இரத்தத்தை ஆவிக்குரிய வகையில் பகிர்ந்துகொள்ளுதல்.
- புதிய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டு உணர்ந்தறிதலை அறிவித்தல்.
- அவரது வசனத்தின்படி வாழ்வதற்கு நம்மை மீண்டும் அர்ப்பணித்தல்.
- அவர் திரும்ப வரும் வரையில் அவரது ஜீவியத்தையும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அறிவித்தல்.
- ஆவிக்குரிய பலத்தையும் மறுவலிவூட்டுதலையும் பெற்றுக்கொள்ளுதல்.

இன்றைய நட்களில் இயேசுவைப் பின்பற்றுபவர்கள், அவரது ஆவிக்குரிய

பிரசன்னத்தை உணர்ந்து அறிந்தவர்களாக, அவர் மறுபடியும் வரும்வரையிலும் இராப்போஜனத்தின் மூலமாக அவருடன் ஐக்கியம் கொண்டிருக்க முடியும் (1 கொரிந்தியர் 11:26). இயல்பான அந்தப் பொருட்களை உண்ணுதல் என்பது அவர் ஒருகாலத்தில் இங்கு உடல்ரீதியாகப் பிரசன்னமாகி இருந்தார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. அவர் காணப்பட இயலாவிட்டாலும், அவர் நம்முடன் இருக்கிறார் என்பதற்கும் அவரது ஆவிக்குரிய பிரசன்னத்தை நாம் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும் என்பதற்கும், அந்த நினைவுச்சின்னங்கள் உடல்ரீதியான நினைவூட்டுதலாக உள்ளன. "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத்தேயு 18:20). அவரைப் பின்பற்றுபவர்களுடன் அவர் உலகத்தின் முடிவுவரையிலும் இருப்பதாக அவர் வாக்களித்துள்ளார் (மத்தேயு 28:20).

இந்த சத்தியங்களைக் கருத்தில் கொண்ட நிலையில், "நினைவுகூருதல்" என்பது இந்த வார்த்தையை நாம் வழக்கமாகப் பயன்படுத்துவதைக் காட்டிலும் அதிகமான அர்த்தங்களை உள்ளடக்குவதாக இருக்கலாம்.

## நாம் கிறிஸ்துவுடன் நெருங்கிய உறவைக் கண்டறிகிறோம்

இராப்போஜனத்தில் நாம் இயேசுவுடன் நெருங்கிய உறவை அல்லது ஐக்கியத்தைக் கொண்டுள்ளாம் (1 கொரிந்தியர் 10:16). நமது ஐக்கியம் தேவைப்படும் அளவுக்கு இயேசு தனிமையாக இருப்பதில்லை; ஆனால் அவரது அன்பினிமித்தமாக, அவர் தாம் உண்டாக்கியவர்களுடன் நெருங்கிய உறவை விரும்புகிறார். இது தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கையும் (ஆதியாகமம் 5:24; எபிரெயர் 11:5), உண்மையுள்ள தீர்க்கதரிசியான எலியாவையும் (2 இராஜாக்கள் 2:11) தேவன் எடுத்துக்கொண்ட நிகழ்வில் காணப்படுகிறது. யாக்கோபு, "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார்" என்று எழுதினார் (யாக்கோபு 4:5). இயேசு நம்முடன் ஐக்கியம் கொண்டிருப்பதை விரும்புகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 3:20), ஆனால் அவருடனான ஐக்கியம் தேவைப்படும் மக்களாக இருப்பது நாம் தான். கர்த்தரின் இராப்போஜனம் என்பது, அந்த உறவைச் சாத்தியமாக்குவதற்கு அவர் அருளியுள்ள வழிகளில் ஒன்றாக உள்ளது.

எனது தாத்தா பல ஆண்டுகளாகத் தாம் வைத்துக் கொண்டிருந்த சிறு கத்தி ஒன்றைத் தாம் இறப்பதற்கு முன்பு, அவர் எனக்குக் கொடுத்தார். நான் அந்தக் கத்தியை எடுக்கும் ஒவ்வொரு முறையும், எனது தாத்தாவைப் பற்றி நினைப்பதுண்டு. அவர் பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்திருந்தாலும், நானும் அவரும் ஒன்றாகச் செலவிட்ட பொழுதுகளை, எனது நினைவில் நான் மீண்டும் பகிர்வது உண்டு. அவ்வாறே, வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி இயேசுவைப் பற்றிய கருத்தோட்டத்தை மீண்டும் நினைவில் கொண்டுவரவும் அவர் நம்மீது கொண்ட அன்பினிமித்தம், நமது பாவங்களுக்காக மரிப்பதற்கு அவர் உடல்ரீதியாக இந்த பூமிக்கு வந்தார் என்பதை உணர்ந்தறியவும், அப்பமும் திராட்ச ரசமும் நமக்கு உதவக்கூடும்.

இராப்போஜனமானது இயேசுவுடன் நாம் ஐக்கியம் கொள்ள நமக்கு

*உதவுகிற அவரது ஆவிக்குரிய பிரசன்னத்தின் உண்மை நிலையினுடைய பௌதீக அடையாளமாக உள்ளது (யோவான் 20:29). இது நாம் வெளிச்சத்தில் நடந்துகொள்வதன் ஒரு பகுதியாக, பிதா குமாரன் பரிசுத்த ஆவியோடும் நமது கிறிஸ்தவ சகோதர சகோதரிகளோடும் நாம் ஐக்கியம் கொண்டுள்ள வாழும் வகையாக உள்ளது (1 கொரிந்தியர் 1:9; 1 யோவான் 1:6, 7).*

*இயேசு தமது சரீரத்தையும் இரத்தத்தையும் பலியாக அளித்ததில், அவரது மாபெரும் தன்மைகள் யாவும் காணப்படுகின்றன. அவரது அன்பு, பரிவிரக்கம், அக்கறை மற்றும் ஊழியத்துவம் ஆகியவற்றைத் தியானிப்பதற்குக் கர்த்தரின் இராப்போஜனம் நமக்கு உதவ வேண்டும். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13).*

*தொடக்ககால எழுத்தாளர்கள், அப்பத்தையும் திராட்சரசத்தையும் இயேசுவின் பூமிக்குரிய வாழ்வை நினைவூட்டுபவை என்ற வகையில் உணர்ந்து ஏற்றுக்கொண்டனர். அவரது பூமிக்குரிய பிரசன்னம், அவரது பலி மற்றும் அவரது பாடுகள் ஆகியவற்றை அவர்கள் தியானிக்க இந்த நினைவுச் சின்னங்கள் அவர்களுக்கு உதவின. அவர்கள் இந்த நினைவுச் சின்னங்களை, நேர்பொருளில் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் மாற்றம் அடைந்துள்ளன என்ற வகையில் அல்ல ஆனால் இவற்றை ஒரு பிரதிநிதித்துவப் பொருட்களாகவே பார்த்தனர்.*

## நாம் கிறிஸ்தவ ஐக்கியத்தை அனுபவிக்கிறோம்

*கர்த்தருடைய இராப்போஜனத்தில் இயேசுவை நினைவுகூருவதால், கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் தங்கள் பொழுதுகளை அவருடன் பகிர்ந்து கொள்கின்றனர். இயேசுவுடன் ஐக்கியவிருந்தில் கலந்துகொள்ளும்போது நாம், அவரது சரீரமான சபையுடனும் ஐக்கியம் கொள்கிறோம்.*

> *ஆகையால், தொடக்ககால கர்த்தருடைய இராப்போஜனம் பின்வரும் இரு தூண்களை மையமாகக் கொண்டிருந்தது: கிறிஸ்துவின் (ஆவிக்குரிய) பிரசன்னம் மற்றும் அந்தப் பிரசன்னத்தை அனுபவித்தவர்களின் ஐக்கியம். ...*
>
> *... "அப்பம் பிடுகிற" வேளையின்போது தொடக்ககலக் கிறிஸ்தவர்களால் வெளிப்படுத்தப்பட்ட சந்தோஷமானது, கூடிவந்த சீஷர்கள் சிலுவையில் அறையப்பட்ட தங்கள் எஜமானரின் உடலை உண்டு அவரது இரத்தத்தைக் குடித்தனர் என்ற கருத்தினால் அல்ல, ஆனால் அவர்கள் தங்கள் மத்தியில் உண்மையாகவே பிரசன்னமாகி இருந்த* உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுடன் *அவ்விருந்தை உண்டனர் என்ற உணர்விலேயே ஆதாரமூலத்தைக் கொண்டிருந்தது.*[1]

*சக கிறிஸ்தவர்களுடன் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றல் என்பது, இயேசுவுடன் ஐக்கியவிருந்தைப் பொதுவாகப் பகிர்ந்து கொள்வதன் மூலமாக ஒருவர் பிறரை ஏற்றுக்கொள்வதை உள்ளடக்குகிறது. அவர் தமது மக்கள் தம்முடன் கொண்டுள்ள ஐக்கியத்தினாலும் தமது உணவு மேஜையில் உள்ளவற்றைத் தம்மைப் பின்பற்றுபவர்களுடன் பகிர்ந்துகொள்வதாலும்*

*ஆராதிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.*

*இயேசு, லவோதிக்கேயா சபைக்குழுமத்தின் கதவருகே நின்று தட்டுதல் போன்ற சித்தரிப்பு, அவர்களுடன் உண்பதன் மூலம் ஐக்கியமும் ஐக்கியவிருந்தும் கொண்டிருக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தைச் செயல்விளக்கப்படுத்துகிறது. அவர்கள் பரிதாபமான வகையில் கதவை மூடி அவரை வெளியேற்றினர் (வெளிப்படுத்தின விசேஷம் 3:14-20). அவரது உணவு மேஜையில் நாம் அவரை நினைவுகூராமல் உண்டு குடித்தால், நாமும் அவரை வெளியேற்றிக் கதவை மூடுகிறோம் என்றாகிறது. அவர் நம்முடன் ஐக்கிய விருந்தைக் கொண்டிருக்க விரும்புகிறார்.*

## வார்த்தையான இயேசு மாம்சமானார் என்பதை நாம் அறிவிக்கிறோம்

*கர்த்தருடைய இராப்போஜனத்தில் பௌதீகரீதியான பொருட்களைப் பயன்படுத்துதல் என்பது, இயேசுவின் திரு அவதாரத்தை, அதாவது மாம்சத்தில் தேவனாக அவர் இருந்ததை அறிவிக்கிறது (மத்தேயு 1:23). அவர் மனிதத் தோற்றத்தைக் கொண்டிருந்த மாயையான ஆவியாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர் மரியாளிடத்தில் பிறந்ததால், மனிதகுலம் முழுமையும் கொண்டுள்ளதைப் போன்ற உலகப்பிரகாரமான உடலில் குடிகொண்டார் (எபிரெயர் 2:14).*

*இயேசு மனித அனுபவத்தைப் புரிந்துகொள்ளக் கூடும்படிக்கு மாம்சமானார் (எபிரெயர் 4:15). அவர் உண்டார், உறங்கினார், நடந்தார், மிருகத்தின் மீது பயணித்தார் மற்றும் சிலுவையில் அறையப்பட்டார். அவரது உடல் கழுவப்பட்டது, தைலத்தைக் கொண்டு அபிஷேகிக்கப்பட்டது மற்றும் அடக்கத்திற்குத் தயாராகத் துணிகளால் சுற்றி மூடப்பட்டது. அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்புகூட, அவர் தொடப்படக் கூடியவராகவே இருந்தார்.*

*இயேசு இந்த பூமியில் இருந்தபோது, அவர் ஒரு இயல்பான உடலைக் கொண்டிருந்தார் என்று புதிய ஏற்பாடு தெளிவாகப் போதிக்கிறது.*

- *வார்த்தையாக இருந்த இயேசு மாம்சமானார் (யோவான் 1:14).*
- *அவர் ஒரு பெண்ணிடத்தில் இருந்து பிறந்தார் (மத்தேயு 1:18, 25).*
- *அவர் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தார் (ரோமர் 1:3).*
- *அவர் எல்லா வகையிலும் மனிதரைப் போன்று இருந்தார் (பிலிப்பியர் 2:7, 8; எபிரெயர் 2:17).*
- *அவர் மனிதகுலம் முழுமைக்கும் பொதுவான அதே மாம்சத்தையும் இரத்தத்தையும் பங்காகக் கொண்டிருந்ததால், உலகத்தின் பாவங்களுக்காக அவரால் மரிக்க முடிந்தது (எபிரெயர் 2:14).*
- *அவர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு மாம்சத்தையும் எலும்புகளையும் கொண்டிருந்தார் (லூக்கா 24:39, 40).*
- *அவர் மாம்சப்பிரகாரம் இருந்தார் என்ற வகையில் அவர் மனிதக் கைகளால் தொடப்படக் கூடியவராக இருந்தார் (மத்தேயு 28:9; லூக்கா 24:39; யோவான் 20:17; 1 யோவான் 1:1), ஆணிதுளைத்த அவரது கைகளையும் ஈட்டியால் ஊடுருவப்பட்ட அவரது விலாவையும்*

கைகளால் ஆய்வு செய்ய முடிந்தது (யோவான் 20:27).

இயேசு பரலோகத்தில் இருந்து பூமிக்கு இறங்கி வந்து மனிதரின் மாம்சத்தில் வாசம் செய்தார் (யோவான் 1:14). இதை மறுக்கிறவர்கள் அந்திகிறிஸ்துவாக (2 யோவான் 7) அதாவது அவரை எதிர்க்கிறவர்களாக இருக்கின்றனர், ஐக்கிய விருந்தில் உள்ள அப்பமும் திராட்சரசமும் அவரது உடல் மற்றும் இரத்தம் ஆகியவற்றினுடைய மாம்சப்பிரகாரமான உண்மை நிலையின் அடையாளங்களாக உள்ளன.

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" (மத்தேயு 26:26) என்று கூறியதன் மூலம் இயேசு, மனிதகுலத்திற்கான தமது பலியில் தமது முழு உடலையும் தமது முழு இருப்பையும் உள்ளடக்கினார். அவர் தமது மாம்சத்தின் பொருள் மாத்திரமல்ல ஆனால் தமது முழு நபர்த்துவமும் பலிசெலுத்தப்பட்டது என்று அர்த்தப்படுத்தினார்.[2]

## நாம் புதிய உடன்படிக்கையின் கீழ் இருப்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்கிறோம்

ஒரு உடன்படிக்கை என்பது ஒரு ஒப்பந்தமாக அல்லது ஒரு இசைந்த ஏற்பாடாக உள்ளது. புதிய உடன்படிக்கையானது முதலாவதைக் காட்டிலும் மேன்மையானதாக இருந்தது (எபிரெயர் 8:6) மற்றும் இது முதலாவது உடன்படிக்கை அளிக்க இயலாதவற்றை அளித்தது (ரோமர் 8:3, 4; எபிரெயர் 10:1-4). புதிய உடன்படிக்கையானது இயேசுவின் இரத்தத்தின் மூலம் பாவமன்னிப்பையும் (எபிரெயர் 9:22) பரலோகத்தில் நித்தியஜீவன் உண்டு என்ற நம்பிக்கையையும் (1 பேதுரு 1:3, 4) சாத்தியமாக்கிற்று.

முதலாவது உடன்படிக்கையானது மிருகத்தின் இரத்தத்தைக் கொண்டு ஒப்புக்கொடுக்கப்பட்டது, இது புதிய ஏற்பாட்டில் ஒப்புக்கொடுக்கப்பட்ட (மத்தேயு 26:28; மாற்கு 14:24; லுக்கா 22:20; 1 கொரிந்தியர் 11:25) இயேசுவின் இரத்தத்தை முன்னிழலிட்டது (யாத்திராகமம் 24:5-8; எபிரெயர் 9:18-20). ஒரேதரம் பலியிடப்பட்ட, எல்லாவற்றிலும் போதுமான பலியாக இருந்த இயேசுவின் பலியினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டு இனி ஒருக்காலும் நினைக்கப்படாதவைகளாயின (எபிரெயர் 10:12, 14, 17).

தேவன், பத்துக் கட்டளைகள் உள்ளடங்கிய முதலாம் உடன்படிக்கையை, இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டில் இருந்து புறப்பட்ட பின்னர் அவர்களோடு ஏற்படுத்தினார் (யாத்திராகமம் 34:27, 28; 1 இராஜாக்கள் 8:9, 21). "நீங்கள் (இஸ்ரவேல் மக்கள்; உபாகமம் 4:1) கைக்கொள்ளவேண்டும் என்று அவர் உங்களுக்குக் கட்டளையிட்ட பத்துக் கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை அவர் உங்களுக்கு அறிவித்து, அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதினார்" (உபாகமம் 4:13). புதிய உடன்படிக்கையானது முதலாவதான பழைய உடன்படிக்கைக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது (எபிரெயர் 8:6-13; 10:9).

கிறிஸ்தவர்கள் முதலாவதான பழைய உடன்படிக்கையின் கீழ் அல்ல, ஆனால் இரண்டாவதான புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ளனர். இரண்டாவதை நிலைநிறுத்தும்படி முதலாவது புறம்பே ஒதுக்கப்பட்டது. கர்த்தருடைய இராப்போஜனத்தில் புசிப்பதில் நாம், இயேசுவின் இரத்தத்தைக்

*கொண்டு அர்ப்பணிக்கப்பட்டுள்ள புதிய உடன்படிக்கையின்கீழ் இருக்கிறோம் என்ற உண்மைக்கு அங்கீகாரம் அளிக்கிறோம் (மத்தேயு 26:28).*

## நாம் ஆவிக்குரிய பெலத்தைக் கண்டறிகிறோம்

*கொரிந்து நகரில் இருந்த சில கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் பெலவீனமாக இருந்து கர்த்தருடைய இராப்போஜனத்தைத் தவறாகக் கண்ணோக்கினர்; அவர்கள் "கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியா"து இருந்தனர் (1 கொரிந்தியர் 11:29, 30). அப்பம் மற்றும் திராட்ச ரசம் ஆகியவற்றுடன் இணைந்துள்ள மறைவான கருத்துக்களை உணர்ந்து அறிபவர்களை மாத்திரமே இந்த இராப்போஜனம் ஆசீர்வதிக்கிறது.*

*அப்பத்தை (உணவை) உண்பதால் தரவழைக்கப்படக் கூடிய உடல்ரீதியான சத்துவத்தை, இராப்போஜனத்தின் அப்பத்தில் பங்கேற்பதால் தரவழைக்கப்படக் கூடிய ஆவிக்குரிய பலத்துடன் ஒப்பிட முடியும். உணவில் இருந்து உடல்ரீதியான பலமும் நலமும் பெற்றுக்கொள்ளப்படுவது போன்றே, இயேசுவைப் பற்றித் தியானிக்கையில் ஆவிக்குரிய பெலனும் ஆதாயப்படுத்தப்பட முடியும்.*

*இயேசுவின் இரத்தத்தின் பிரதிநிதித்துவம் என்ற வகையில், திராட்ச ரசமானது புதுப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்வை அளிக்க முடியும். நாம் அவரது இரத்தத்துடனான நமது இணைவின் மூலம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறோம்.*

*யோவான் 6:55ல் இயேசு, "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" என்று கூறியபோது அவர் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றிப் பேசவில்லை. இருந்தபோதிலும் அவரது உடல் மற்றும் இரத்தம் ஆகியவற்றின் சின்னங்களில் பங்கேற்பதன் மூலம் நாம் பெறுகிற ஆவிக்குரிய பெலம் மற்றும் வாழ்வு ஆகியவற்றிற்கு அவரது இந்தக் கூற்றுகளில் மறைவாக உள்ள கருத்துக்கள் நடைமுறைப்படுகின்றன. அப்பமும் பானமும் நமது உடல்ரீதியான பசிதாகத்தைத் திருப்திப்படுத்தும் சாதாரண நோக்கத்திற்குப் பயன்படுவதில்லை. அதற்கு பதிலாக, அவைகள் ஆவிக்குரிய சத்துவத்தை அளிக்கின்றன மற்றும் அவைகள் இயேசுவின் உடல் மற்றும் இரத்தம் ஆகியவற்றின் காட்சி நினைவூட்டுதலாகப் பயன்படுகின்றன.*

## தொகுப்புரை

*கர்த்தருடைய இராப்போஜனம் புதிய ஏற்பாட்டின் மைய ஆய்வுக்கருத்தை உருப்படுத்துகிறது. இது இயேசுவை முன்னணியில் நிறுத்தி வைக்கிறது மற்றும் இது, நமக்காக மரித்து, தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, தமது பரலோக அரியணைக்கு ஏறிச்சென்ற இயேசுவை, நமது கர்த்தர் மற்றும் இரட்சகர் என்ற வகையில் அவர்மீது கவனம் குவிக்க நமக்கு ஒரு வாய்ப்பையும் அளிக்கிறது. இந்த இராப்போஜனத்தின் மூலமாக நாம் ஆவிக்குரிய வாழ்வைப் பெறுகிறோம், அவருடன் ஐக்கிய விருந்தில் கலந்துகொள்கிறோம் மற்றும் புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் நிமித்தமாகப் பரலோகத்தில் அவருடன் நித்திய வாழ்வின் நம்பிக்கையையும் பெறுகிறோம் (காண்க எபிரெயர் 8:6; 1 பேதுரு 1:3, 4).*

குறிப்புகள்

[1]Oscar Cullmann, "The Breaking of Bread and the Resurrection Appearances," in Oscar Cullmann and F. J. Leenhardt, *Essays on the Lord's Supper,* trans. and ed. J. G. Davies (Cambridge: Lutterworth Press, 1958; reprint, Atlanta, Ga.: John Knox Press, 1975), 16. [2]Scott McCormick, Jr., *The Lord's Supper: A Biblical Interpretation* (Philadelphia: Westminster Press, 1966), 16.

## கர்த்தருடைய இராப்போஜனத்தின் மொழி

கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பதற்குப் புதிய ஏற்பாடு பலவகையான சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறது. இவற்றைக் கண்ணோக்குதல் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் இந்த நிகழ்வின் தனிச்சிறப்புப் பற்றிய மேல்கண்ணோட்டத்தை நமக்குத் தருகிறது.

*"நாம் பிட்கிற அப்பம்"* (1 கொரிந்தியர் 10:16). *"Klao"* (பிட்கிற) என்ற வினைச்சொல் அல்லது *"klasis"* (பிட்குதல்) என்ற பெயர்ச்சொல், சில இடங்களில் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிக்கிறது (நடபடிகள் 2:42; 20:7; 1 கொரிந்தியர் 10:16). "பிட்குதல்" என்ற இவ்வடிவம் அப்பம் பிட்குதலை[1] மற்றும் பொதுவான உணவை (நடபடிகள் 2:46) குறிக்கப்பயன்படுத்தப்பட்டுள்ளது. "அப்பம் பிட்குதல்" என்ற சொற்றொடர், தொடக்ககால சபை இலக்கியத்தில் கர்த்தருடைய உணவை, கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

*"ஐக்கியம்."* *"Koinonia"* என்ற வார்த்தை (1 கொரிந்தியர் 10:16) "பகிர்தல்" அல்லது "பங்கேற்றல்" என்று அர்த்தப்படுகிறது. இது இயேசுவின் உடல் மற்றும் இரத்தம் ஆகியவற்றில் ஆவிக்குரிய வகையில் பங்கேற்றல் அல்லது பகிர்தலை விவரிக்கிறது.

*"கர்த்தருடைய போஜனபந்தி"* (1 கொரிந்தியர் 10:21). "கர்த்தருடைய" (*kuriou*) என்பது, "பந்தியை" கர்த்தருக்கு உரித்தானது என்று திருத்தி அமைக்கும் உரிமைப் பெயர்ச்சொல்லாக உள்ளது. இது, பந்தியில் உள்ள நினைவுச்சின்னங்களுடன்[2] இணைந்த ஆராதனையானது அவருடைய வடிவமைப்பின்படியானது என்று மறைமுகமாக உணர்த்துகிறது.

*"கர்த்தருடைய இராப்போஜனம்"* (1 கொரிந்தியர் 11:20); இந்தச் சொல்விளக்கம் கர்த்தருக்கு உரிய இராப்போஜனம் என்று அர்த்தப்படுத்துவதில்லை. "கர்த்தருடைய" *(kuriakon)* என்ற வார்த்தை உரிமைப் பெயர்ச்சொல்லாக அல்ல ஆனால் இராப்போஜனத்தைத் திருத்தி அமைக்கும் ஒரு பெயர் உரிச்சொல்லாக உள்ளது. "கர்த்தருடைய நாள்" (வெளிப்படுத்தின விசேஷம் 1:10) என்பது கர்த்தரைக் கனப்படுத்தும் நாளாக இருப்பதைப் போன்றே, இராப்போஜனம் என்பது கர்த்தரைக் கனப்படுத்துவதாக உள்ளது.

சிலர் கர்த்தருடைய இராப்போஜனத்தை, அதன் அடையாளத்தின் மூலமாக பரிசுத்தமாக்கும் கிருபையை அல்லது ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிற சடங்காச்சாரம் என்று அர்த்தப்படும் வகையில், "சாக்ரமந்து" அல்லது "திருவருட்சாதனம்" என்று தவறாக அழைக்கின்றனர். ஞானஸ்நானமும்கூட தண்ணீர் மூலமாகவே ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிற ஒரு சாக்ரமந்துவாக அல்லது திருவருட்சாதனமாக இருப்பதாகச் சிலரால் கருதப்படுகிறது. இதற்கு நேர்மாறாக, இயேசுவின் இரத்தத்தினாலேயே சுத்தி

கரித்தல் சாத்தியமாக்கப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 1:5) மற்றும் இது ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது அதைப் பெறுபவரின் இருதயத்திற்குள் ஏற்படும் ஆவிக்குரிய ஈடுபாட்டின்மூலமே நடைபெறுகிறது (ரோமர் 6:4-8, 17, 18). கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் சிந்தனையில் இருந்து பிரிந்துள்ள நிலையில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பவர்களுக்கு இது விசேஷித்த கிருபையைக் கொண்டு வருகிற ஒரு சடங்காச்சாரம் என்ற வகையில் கண்ணோக்கப்படக் கூடாது.

"Eucharist" என்பது ''நன்றி'' என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையின் ஒலியாக்கமாக உள்ளது, இது அப்பம் மற்றும் திராட்சரசம் ஆகியவற்றிற்காக நன்றிசெலுத்துதலின் சொல்விளக்கங்கள் காரணமாக, கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பதற்குப் தவறாகப் பயன்படுத்தத் தொடங்கப்பட்டது. ஒரு விளக்கவுரையாளர் [*eucharistic,*] என்பது, அதன் நன்றி செலுத்துதலின் ஆவிக்குரிய கருத்தில் இருந்து ஒரு பெயரை விளக்கப்படுத்துவதாக மாற்றப்பட்டது முதலாவது கவனிக்கப்பட வேண்டிய விஷயமாக உள்ளது மற்றும் "நாம் இதை கர்த்தருடைய இராப்போஜனத்தின் முதன்மைத் தலைப்புச் சொல் என்று சொல்லலாம்"[3] என்று கூறினார்.

---

குறிப்புகள்

[1]மத்தேயு 14:19; 15:36; 26:26; மாற்கு 8:6, 19; 14:22; லுக்கா 22:19; 24:30; நடபடிகள் 20:11; 27:35; 1 கொரிந்தியர் 10:16; 11:24 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். [2]அப்பமும் திராட்சரசமும் "நினைவுச்சின்னங்களாக" உள்ளன, இவைகள் கிறிஸ்துவின் உடல் மற்றும் இரத்தம் ஆகியவற்றின் அடையாளங்களாக அல்லது பிரதிநிதித்துவங்களாக உள்ளன. [3]Charles Hebert, *The Lord's Supper: Uninspired Teaching*, vol. 1 (London: Seeley, Jackson and Halliday, 1879), 28.